TNTS020013692026



Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Tenkasi

Calendar of cases tried by the Judicial Magistrate of Tenkasi.

| Date of offence | Date of Report of complaint | Remand or surrender of accused | Release on bail | Commencement of trial | close of trial | Sentence of order |
|---|---|---|---|---|---|---|
| 07.12.2025 | 09.12.25 | 14.12.2025 | 07.08.2026 | 02.06.26 | 16.07.26 | 07.08.26 |
| C.S.D. 03.02.26 | Explanation of Delay and Remarks: NIL | | | | | |
| C.S.F.D 18.03.26 | | | | | | |
| D.Cogni.18.03.26 | | | | | | |
| A.P.D. 02.06.26 | | | | | | |

Judgment in CC 93/2026 on the file of the Judicial Magistrate of Tenkasi.

Complainant: The Sub Inspector of Police, Alwarkurichi P.S in Cr.No.350/2025

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| Ramachandran | 23/26 | Chellappa |

| Caste or Religion | Calling | Residence | Police Station |
|---|---|---|---|
| Hindu | Coolie | Keela Ambur | Alwarkurichi |

**Offence** : Section 331(4), 305(a) BNS.

**Sentence** : எதிரிக்கு பிரிவு 331(4) BNS ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு ஏற்கனவே சிறையில் இருந்த 14.12.2025 முதல் 07.08.2026 வரையிலான 237 நாட்களை தண்டனையாக விதித்தும், ரூ.25 அபராதமும், கட்டத் தவறினால் ஒரு வாரம் மெய்க்காவல் சிறை தண்டனையும்; எதிரிக்கு பிரிவு 305(a) BNS ன் கீழான குற்றத்திற்கு எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த 14.12.2025 முதல் 07.08.2026 வரையிலான 237 நாட்களை தண்டனையாக விதித்தும், ரூ.25 அபராதமும், கட்டத் தவறினால் ஒரு வாரம் மெய்க்காவல் சிறை தண்டனையும்; விதித்தும் பிரிவு 271(2) BNSS ன் கீழ்

தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி சிறைதண்டனையை எதிரி ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த 14.12.2025 முதல் 07.08.2026 வரையிலான நாட்களை மேற்படி சிறை தண்டனையில் இருந்து பிரிவு 468 BNSS ன் கீழ் கழித்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.08.07 19:28:57 +0530

Judicial Magistrate,
Tenkasi.

TNTS020013692026



நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை: திருமதி.எஸ்.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 7 ம் நாள் வெள்ளிக்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 93/2026

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
ஆழ்வார்குறிச்சி கா.நி.கு.எண் 350/2025 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

ராமச்சந்திரன், 23/26,
த.பெ.செல்லப்பா,
எண்.7/38, சிவன் கோவில் தெரு,
கீழ ஆம்பூர் ... எதிரி

இவ்வழக்கு 18.03.2026 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.செல்வக்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u> –**

இவ்வழக்கின் 1வது சாட்சி கடந்த 07.12.2025 ம் தேதி மாலை சுமார் 06.00 மணிக்கு கீழஆம்பூர் தெற்கு கிராமத்திலுள்ள தனது வீட்டை பூட்டிவிட்டு சென்ற பிறகு எதிரி 07.12.2025 ம் தேதி இரவு சுமார் 08.30 மணிக்கு வழக்கின் 1வது சாட்சியின் வீட்டின் பின்புற கதவின் தாழ்ப்பாளை கதிர் அருவாளை பயன்படுத்தி நெம்பி திறந்து உள்ளே சென்று உள் அறையில் இருந்த மரப்பீரோவின் தாழ்ப்பாளை தேங்காய் திருகி இரும்பு கம்பியைப் பயன்படுத்தி நெம்பி திறந்து மரப்பீரோவின் துணிக்கு அடியில் 1வது சாட்சி வைத்திருந்த ரூபாய் 10,000/– பணத்தையும் மரப்பீரோவில் அல்மதினா ஜூவல்லர்ஸ் என எழுதப்பட்ட நீலம் மற்றும் வெள்ளை நிற மணிபர்ஸில் 1வது சாட்சி

வைத்திருந்த ரூபாய் 2000/– பணத்தையும் தனது சுயலாபம் கருதி திருடிச் சென்றதாகவும், எனவே எதிரி மீது பிரிவுகள் 331(4), 305(a) BNS ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது ஆழ்வார்குறிச்சி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 227 BNSS ன் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 230 BNSS ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரியிடம் குற்றம் குறித்து வினவியபோது அவர் குற்றத்தினை மறுத்துள்ளார். இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 263(1) BNSS ன் படி எதிரி மீது பிரிவுகள் 331(4), 305(a) BNS ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து பிரிவு 263(2) BNSS ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர் தான் குற்றவாளி இல்லை என்று மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில், எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 10 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. மேலும், சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு –**

5(i). அ.சா.1 நடராஜன், தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், அவர் தன் ஊர்க்காரர் என்றும், கடந்த 07.12.2025 ம் தேதி தான் தன் சொந்த வேலையாக சென்னைக்கு சென்றிருந்ததாகவும், தன் வீட்டின் முன் பக்க கதவை பூட்டி தான் சாவியை எடுத்து சென்றிருந்ததாகவும், பின்னர் 09.12.2025 ம் தேதி தான் ஊருக்கு வந்து பார்த்த போது தன் வீட்டின் கதவு உள்புறமாக தாழ்ப்பாள் போடபட்டிருந்தது என்றும், பின்னர் பின்பக்கமாக சென்று பார்த்த போது வீட்டின் பின்புற கதவுகள் இரண்டு உடைந்திருந்தது என்றும், தான் உள்ளே சென்று பார்த்த

போது படுக்கையறையில் உள்ள மர பீரோல் சேதமடைந்திருந்தது என்றும், பீரோவில் வைத்திருந்த துணிகள் எல்லாம் கலைந்து கிடந்தது என்றும், தான் பீரோவிற்குள் ஒரு டப்பாவில் வைத்திருந்த ரூ.10,000 மற்றும் மனிபர்ஸில் வைத்திருந்த ரூ.2,000 திருடு போயிருந்தது என்றும், உடனே பக்கத்து வீட்டில் உள்ள சுந்தரம் ஐயரிடம் நடந்த விவரத்தை கூறி ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்திற்கு சென்றதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான் என்றும், அதில் இருக்கும் கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 என்றும், பின்னர் ஒரு வாரம் கழித்து போலிசார் யார் மீதாவது சந்தேகம் உள்ளதா என தன்னிடம் கேட்டார்கள் என்றும், தான் எதிரி மீது சந்தேகம் உள்ளதாக தெரிவித்ததாகவும், ஏற்கனவே பல திருட்டு வழக்குகள் எதிரியின் மீது உள்ளதால் அவரின் பெயரை போலிசாரிடம் சொன்னதாகவும், பின்னர் போலிசார் விசாரித்து எதிரி தான் தன் வீட்டிலிருந்து பணத்தை திருடியதாக ஒத்துக் கொண்டுள்ளார் என தன்னிடம் சொன்னார்கள் என்றும், பின்னர் போலிசார் ரூ.5000/- பணம் தான் எதிரியிடம் உள்ளது என்றும், மீதம் இருந்த பணத்தை எதிரி செலவழித்து விட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும், பின்னர் தான் நீதிமன்றத்தில் இடைக்காலமாக மனு தாக்கல் செய்து ரூ.5000/- திரும்ப பெற்று கொண்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ரூ.5000/- பணத்தை தான் தான் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக் கொண்டதாகவும், தான் தன் குடும்ப தேவைக்காக பணத்தை செலவு செய்து விட்டதாகவும், மேற்படி புகைப்படம் அ.சா.ஆ.2 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5(ii). அ.சா.2 அன்பழகன், தனது சாட்சியத்தில், சாட்சி பூதப்பாண்டி என்பவரை தெரியும் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தேதி நினைவில் இல்லை என்றும், கடந்த 6 மாதங்களுக்கு முன்பு டிசம்பர் மாதம் மதியம் 3 மணியளவில் தான் வயலுக்கு சென்று விட்டு வந்து கொண்டிருந்த போது ஆம்பூர் சிவன் கோவில் அருகே உள்ள நடராஜன் வீட்டின் அருகே போலிசார் வந்தார்கள் என்றும், போலிசார்

அங்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து கொண்டார்கள் என்றும், போலிசார் களவு வழக்கு சம்பந்தமாக வந்ததாக கூறினார்கள் என்றும், அதில் தான் சாட்சியாக கையொப்பம் போட்டதாகவும், தன்னுடன் சாட்சி பூதப்பாண்டியும் கையொப்பம் செய்தார் என்றும், மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.3 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5(iii). அ.சா.3 சீனிவாசன் என்ற வாசு, தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், அவரை போலிசார் விசாரிக்கும் போது தான் பார்த்ததாகவும், சாட்சி பழனியாபிள்ளை என்பவரை தெரியும் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், கடந்த 14.12.2025ம் தேதி காலை 8.15 மணிக்கு கீழ ஆம்பூர் கருத்தக விநாயகர் கோவில் தெப்ப குளம் அருகே வைத்து போலிசார் எதிரியை விசாரித்தார்கள் என்றும், அப்போது எதிரி 07.12.2025ம் தேதி இரவு 9.45 மணிக்கு நடராஜன் என்பவரது வீட்டிற்கு பின்னால் கதவை கதிர் அரிவாளை கொண்டு உடைத்து பீரோவில் இருந்த ரூ.10,000/- பணம் மற்றும் பர்சில் இருந்த ரூ.2,000/- பணத்தை எடுத்ததாக போலிசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அப்போது எதிரி கதிர் அரிவாள், தேங்காய் துருவி, பணம் ரூ.5,000, கற்த்தக விநாயகர் கோவில் பின்புறம் உள்ள முட்புதரில் வைத்திருப்பதாக கூறினார் என்றும், பின்னர் காலை 09.30 மணியளவில் கோவில் பின்புறம் உள்ள முட்புதருக்கு சென்றதாகவும், அப்போது எதிரி லேசாக உடைந்திருந்த கதிர் அரிவாள், தேங்காய் துருவி மற்றும் பணம் ரூ.5,000 பின்னர் வெள்ளை பர்ஸ் ஆகியவற்றை போலிசாரிடம் ஒப்படைத்தார் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் போலிசார் தன்னிடம் கையொப்பம் கேட்டார்கள் என்றும், தான் செய்து கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள வழக்கின் சொத்துக்களை தான் எதிரி போலிசாரிடம் ஒப்படைத்தார் என்றும், மேற்படி கதிர்அரிவாள், தேங்காய் துருவி மற்றும் பர்ஸ் உள்ள புகைப்படம் அ.சா.ஆ.4, ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.5, அத்தாட்சி அ.சா.ஆ.6 என்றும், தன்னுடன் சாட்சி பழனியாபிள்ளையும் கையொப்பம் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5(iv). அ.சா.4 முருகன், தனது சாட்சியத்தில், தான் தற்போது ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 09.12.2025 ம் தேதி 14.00 மணிக்கு தான் நிலைய பொறுப்பில் இருந்த போது கீழ ஆம்பூர் தெற்கு கிராமம் என்ற முகவரியை சேர்ந்த சாமிகரையாளர் மகன் திரு.நடராஜன் வயது 69 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண்.350/2025, BNS பிரிவுகள் 331(3), 331(4), 305(a)ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், அந்த முதல் தகவலறிக்கை அசலையும் புகார் மனுவின் அசலையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், மற்ற நகல்களை உயர் அதிகாரி களுக்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கும் வைத்ததாகவும், அந்த முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.7 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5(v). அ.சா.5 தேவி, உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், கடந்த 09.12.2025 ம் தேதி ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்தில் தான் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது HC 726 முருகன் என்பவர் பதிவு செய்யப்பட்டு வைத்திருந்த ஆழ்வார்குறிச்சி காவல் நிலையக் குற்ற எண்.350/2025, BNS பிரிவுகள் 331(3), 331(4), 305(a)ன் கீழ் வைத்திருந்த வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டதாகவும், அன்றைய தினம் சம்பவயிடத்திற்கு 15.00 மணிக்கு சென்று சாட்சிகள் அன்பழகன், பூதத்தான் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப் புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 தயார் செய்ததாகவும், பின்னர் சம்பவ சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில், 14.12.2025 ம் தேதி காலை 07.00 மணிக்கு கீழஆம்பூர் கருத்தவிநாயகர் கோவில் தெப்பக்குளம் அருகே கைது செய்து சாட்சிகள் பழனியாப்பிள்ளை, சீனிவாசன்

ஆகியோர் முன்னிலையில் எதிரியை விசாரித்தபோது, எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அதனடிப்படையில் வழக்கின் சொத்துக்களை 08.15 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் ரூ.5,000/–, முனை ஒடிந்த மர கைப்பிடி கதிர்அருவாள் ஒன்று, வளைந்த தேங்காய் திருவி ஒன்று, அல்மதினா ஜுவல்லரி என்று பெயர் போட்ட நீலம் மற்றும் வெள்ளை கலர் பர்ஸை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினதாகவும், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், எதிரியை 09.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நிலைய பதிவேடுகளில் பதிவு செய்ததாகவும், பின்னர் எதிரி தன்னுடைய ஒப்புதல் வாக்குமூலத்தை இரவில் திருடியதை ஒப்புக் கொண்டதால் வழக்கின் சட்டப்பிரிவுகளை BNS பிரிவுகள் 331(3), 331(4), 305(a)ன் கீழ் இருந்து BNS பிரிவுகள் 331(4), 305(a)ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை அ.சா.ஆ.9 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், வழக்கின் சொத்துக்களை படிவம்91 அ.சா.ஆ.10 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து பி.ஆர்.எண்.62/2026 ஆக பெற்றதாகவும், பின்பு புலன் விசாரணை முடித்து எதிரி மீது BNS பிரிவுகள் 331(4), 305(a)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை 03.02.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான சங்கதிகளை எதிரியிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவிய போது எதிரி பொய்ச்சாட்சி என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா ? என்று வினவிய போது, எதிரி சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது பிரிவுகள் 331(4), 305(a) BNS ன் கீழ் உள்ள குற்றச்சாட்டானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார் –

எதிரி, அ.சா.1 ன் வீட்டில் இருந்து பணத்தை திருடி சென்றுவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், மேற்படி குற்றச்சாட்டானது அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

9. எதிரி தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார் –

அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பொய் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் பெயர் குறிப்பிட்டு புகார் கொடுக்கவில்லை என்றும், எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரிக்கு எதிரானக் குற்றங்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. தீர்வு –

புகார்தாரர் கடந்த 07.12.2025 ம் தேதி மாலை சுமார் 06.00 மணிக்கு தனது சொந்த வேலையாக சென்னை செல்வதற்காக தன் வீட்டை பூட்டிவிட்டு சென்றதாகவும், பிறகு இன்று 09.12.2025 ம் தேதி தனது வீட்டிற்கு வந்து பார்த்தபோது

வீட்டின் முன்பக்க கதவு உட்புறமாக பூட்டப்பட்டிருப்பதை தெரிந்து பின்புற மரக்கதவின் தாழ்பாள் உடைக்கப்பட்டு திறந்து பார்த்ததில் அதன் கதவும் உடைக்கப்பட்டு திறந்து பார்த்ததும் பதறிபோனதாகவும், வீட்டின் உள்அறையில் இருந்த மரப்பீரோவை பார்த்ததில் அதன் கதவும் உடைக்கப்பட்டு பிரோவும் உடைக்கப்பட்டிருந்ததாகவும், அதில் தான் வைத்திருந்த ரூ.10 ஆயிரம் மற்றும் மணி பர்ஸில் வைத்திருந்த பணம் ரூ.2000 மும் திருடு போயிருந்ததாகவும், பணத்தை திருடியவர்கள் யார் என்று தெரியவில்லை என்றும், தான் வீட்டை பூட்டிவிட்டு சென்றதை நோட்ட மர்ம நபர்கள் யாரோ வீட்டின் பின்புற கதவை உடைத்து அதில் தான் வைத்திருந்த பணம் 12 ஆயிரத்தையும் திருடி சென்றுள்ளார்கள் என்றும், எனவே, போலிசாரிடம் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்ததாகவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

11. எதிரியின் மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்கும் போது, புகார்தாரரான அ.சா.1 நடராஜன், தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், கடந்த 07.12.2025 ம் தேதி தான் தன் சொந்த வேலையாக சென்னைக்கு சென்றிருந்ததாகவும், தன் வீட்டின் முன் பக்க கதவை பூட்டி தான் சாவியை எடுத்து சென்றிருந்ததாகவும், பின்னர் 09.12.2025 ம் தேதி தான் ஊருக்கு வந்து பார்த்த போது தன் வீட்டின் கதவு உள்புறமாக தாழ்ப்பாள் போடபட்டிருந்தது என்றும், பின்னர் பின்பக்கமாக சென்று பார்த்த போது வீட்டின் பின்புற கதவுகள் இரண்டு உடைந்திருந்தது என்றும், தான் உள்ளே சென்று பார்த்த போது படுக்கையறையில் உள்ள மர பீரோல் சேதமடைந்திருந்தது என்றும், பீரோவில் வைத்திருந்த துணிகள் எல்லாம் கலைந்து கிடந்தது என்றும், தான் பீரோவிற்குள் ஒரு டப்பாவில் வைத்திருந்த ரூ.10,000 மற்றும் மனிபர்ஸில் வைத்திருந்த ரூ.2,000 திருடு போயிருந்தது என்றும், உடனே பக்கத்து வீட்டில் உள்ள சுந்தரம் ஐயரிடம் நடந்த விவரத்தை கூறி ஆழ்வார்குறிச்சி காவல் நிலையத்திற்கு சென்றதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான் என்றும், அதில் இருக்கும் கையொப்பம்

தன்னுடையது தான் என்றும், தான் எதிரி மீது சந்தேகம் உள்ளதாக தெரிவித்ததாகவும், ஏற்கனவே பல திருட்டு வழக்குகள் எதிரியின் மீது உள்ளதால் அவரின் பெயரை போலிசாரிடம் சொன்னதாகவும், பின்னர் போலிசார் விசாரித்து எதிரி தான் தன் வீட்டிலிருந்து பணத்தை திருடியதாக ஒத்துக் கொண்டுள்ளார் என தன்னிடம் சொன்னார்கள் என்றும், பின்னர் போலிசார் ரூ.5000/- பணம் தான் எதிரியிடம் உள்ளது என்றும், மீதம் இருந்த பணத்தை எதிரி செலவழித்து விட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும், பின்னர் தான் நீதிமன்றத்தில் இடைக்காலமாக மனு தாக்கல் செய்து ரூ.5000/- திரும்ப பெற்று கொண்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ரூ.5000/- பணத்தை தான் தான் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக் கொண்டதாகவும், தான் தன் குடும்ப தேவைக்காக பணத்தை செலவு செய்து விட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 அன்பழகன் தனது சாட்சியத்தில், பார்வை மகஜர் தயார் செய்தது குறித்தும், அதில் தான் கையொப்பம் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.3 சீனிவாசன் என்ற வாசு, தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், அவரை போலிசார் விசாரிக்கும் போது தான் பார்த்ததாகவும், கடந்த 14.12.2025ம் தேதி காலை 8.15 மணிக்கு கீழ ஆம்பூர் கருத்தக விநாயகர் கோவில் தெப்ப குளம் அருகே வைத்து போலிசார் எதிரியை விசாரித்தார்கள் என்றும், அப்போது எதிரி 07.12.2025ம் தேதி இரவு 9.45 மணிக்கு நடராஜன் என்பவரது வீட்டிற்கு பின்னால் கதவை கதிர் அரிவாளை கொண்டு உடைத்து பீரோவில் இருந்த ரூ.10,000/- பணம் மற்றும் பர்சில் இருந்த ரூ.2,000/- பணத்தை எடுத்ததாக போலிசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அப்போது எதிரி கதிர் அரிவாள், தேங்காய் துருவி, பணம் ரூ.5,000, கற்த்தக விநாயகர் கோவில் பின்புறம் உள்ள முட்புதரில் வைத்திருப்பதாக கூறினார் என்றும், பின்னர் காலை 09.30 மணியளவில் கோவில் பின்புறம் உள்ள முட்புதருக்கு சென்றதாகவும், அப்போது எதிரி லேசாக உடைந்திருந்த கதிர் அரிவாள், தேங்காய் துருவி மற்றும் பணம் ரூ.5,000 பின்னர் வெள்ளை பர்ஸ்

ஆகியவற்றை போலிசாரிடம் ஒப்படைத்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள வழக்கின் சொத்துக்களை தான் எதிரி போலிசாரிடம் ஒப்படைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களின் செல்லும் தன்மை குறித்து காண இந்திய சாட்சிய சட்டம் 1872 ன் பிரிவுகள் 24, 25, 26 மற்றும் 27 ஆகியவற்றை காண வேண்டும். இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவுகள் 25 மற்றும் 26 முறையே காவல் துறையினரின் கட்டுப்பாட்டில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாலும், காவல் துறையினரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாலும், அது எதிரிக்கு எதிராக சான்றாக பயன்படுத்த இயலாது. ஆனால் பிரிவு 27 ன்படி ஏதேனும் சங்கதி அல்லது தகவல் காவல்துறையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் போது புதிதாக தெரிய வந்தால் அது ஒப்புதல் வாக்குமூலமாக இருந்தாலும் அதனை எதிரிக்கு எதிராக நிரூபிக்க பயன்படுத்தலாம்.

15. மேற்படி சட்ட வரைமுறைகளின்படி இவ்வழக்கிலுள்ள அரசு தரப்பு சாட்சியங்களை காணும்போது, எதிரியிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அனுமதிக்கப்பட்ட பகுதியான (அ.சா.ஆ.5) "... அவர் வீட்டின் கதவையும் பீரோவின் கதவையும் உடைக்க பயன்படுத்திய கதிர் அருவாள் ஒன்றையும் தேங்காய் திருகி கம்பியையும் அவர் வீட்டில் திருடிய மணிபர்ஸையும் நான் செலவு செய்தது போக மீதமுள்ள ரூபாய் 5000/-த்தையும் விநாயகர் கோவிலுக்கு பின்னால் முட்புதருக்குள் ஒளித்து வைத்துள்ளேன். அதையும் எடுத்து அடையாளம் காட்டி ஆஜர் செய்கிறேன் ..." என்று கூறியதன் பேரில் எதிரியை விநாயகர் கோவில் பின்னால் அழைத்துச் சென்றபோது எதிரியால் அடையாளம் காட்டப்பட்டு கதிர் அருவாள் ஒன்று, தேங்காய் திருகி கம்பி, மணிபர்ஸ், ரூபாய் 5000/-ம் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27 ன்படி மேற்படி புதிதாக விசாரணை அலுவலருக்கு தெரிந்த சங்கதி மற்றும் அதன் தொடர்ச்சியாக கைப்பற்றப்பட்டுள்ள கதிர் அருவாள் ஒன்று, தேங்காய் திருகி கம்பி, மணிபர்ஸ், ரூபாய் 5000/-ம் அனுமதிக்கத்தக்கது ஆகும்.

16. மேலும், ஒப்புதல் வாக்குமூலம் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 சீனிவாசன் என்ற வாசு, தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், அவரை போலிசார் விசாரிக்கும் போது தான் பார்த்ததாகவும், கடந்த 14.12.2025ம் தேதி காலை 8.15 மணிக்கு கீழ ஆம்பூர் கருத்தக விநாயகர் கோவில் தெப்ப குளம் அருகே வைத்து போலிசார் எதிரியை விசாரித்தார்கள் என்றும், அப்போது எதிரி 07.12.2025ம் தேதி இரவு 9.45 மணிக்கு நடராஜன் என்பவரது வீட்டிற்கு பின்னால் கதவை கதிர் அரிவாளை கொண்டு உடைத்து பீரோவில் இருந்த ரூ.10,000/- பணம் மற்றும் பர்சில் இருந்த ரூ.2,000/- பணத்தை எடுத்ததாக போலிசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அப்போது எதிரி கதிர் அரிவாள், தேங்காய் துருவி, பணம் ரூ.5,000, கற்த்தக விநாயகர் கோவில் பின்புறம் உள்ள முட்புதரில் வைத்திருப்பதாக கூறினார் என்றும், பின்னர் காலை 09.30 மணியளவில் கோவில் பின்புறம் உள்ள முட்புதருக்கு சென்றதாகவும், அப்போது எதிரி லேசாக உடைந்திருந்த கதிர் அரிவாள், தேங்காய் துருவி மற்றும் பணம் ரூ.5,000 பின்னர் வெள்ளை பர்ஸ் ஆகியவற்றை போலிசாரிடம் ஒப்படைத்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள வழக்கின் சொத்துக்களை தான் எதிரி போலிசாரிடம் ஒப்படைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5, அத்தாட்சி அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் சாட்சி கையொப்பம் செய்த சாட்சியத்தையும் சார்ந்துள்ள நிலையில், புகாரில் சொல்லப்பட்ட சங்கதிகளை உறுதியூட்டும் வகையில், எதிரி 07.12.2025ம் தேதி இரவு 9.45 மணிக்கு நடராஜன் என்பவரது வீட்டிற்கு பின்னால் கதவை கதிர் அரிவாளை கொண்டு உடைத்து பீரோவில் இருந்த ரூ.10,000/- பணம் மற்றும் பர்சில் இருந்த ரூ.2,000/- பணத்தை எடுத்ததாக போலிசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அப்போது எதிரி கதிர் அரிவாள், தேங்காய் துருவி, பணம் ரூ.5,000, கற்த்தக விநாயகர் கோவில் பின்புறம் உள்ள முட்புதரில் வைத்திருப்பதாக கூறினார் என்றும், பின்னர் காலை 09.30 மணியளவில் கோவில்

பின்புறம் உள்ள முட்புதருக்கு சென்றதாகவும், அப்போது எதிரி லேசாக உடைந்திருந்த கதிர் அரிவாள், தேங்காய் துருவி மற்றும் பணம் ரூ.5,000 பின்னர் வெள்ளை பர்ஸ் ஆகியவற்றை போலிசாரிடம் ஒப்படைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து எதிரி தான் புகார்தாரரான அ.சா.1ன் வீட்டிலிருந்து பணத்தை திருடி சென்றுள்ளது தெரிய வருகிறது. மேற்படி விசாரணை அதிகாரியான அ.சா.5 ஆனவர் எதிரி தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார் என்பதும், அ.சா.3ன் சாட்சியத்திலிருந்து எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதும், அத்தாட்சி அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியை விநாயகர் கோவில் பின்னால் அழைத்துச் சென்றபோது எதிரியால் அடையாளம் காட்டப்பட்டு கதிர் அருவாள் ஒன்று, தேங்காய் திருகி கம்பி, மணிபர்ஸ், ரூபாய் 5000/-ம் ஆகியவை அ.சா.3 மற்றும் பட்டியல் சாட்சி.6ன் முன்பு அ.சா.ஆ.6 ஆன அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்டுள்ளது என்பதும், அ.சா.5 மற்றும் அ.சா.3ன் சாட்சியத்திலிருந்தும், எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதியான அ.சா.ஆ.5ல் இருந்தும் மற்றும் அத்தாட்சி அ.சா.ஆ.6ல் இருந்தும் எதிரி தான் புகார்தாரர் வீட்டில் இரவில் பதுங்கி, நுழைந்து புகார்தாரரின் வீட்டிலுள்ள பணத்தை திருடி சென்றுள்ளது தெளிவாக தெரிய வருகிறது. மேலும், அ.சா.3 மற்றும் அ.சா.5ன் குறுக்கு விசாரணையில், மேற்கண்ட வகையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியையும், அதனடிப்படையில் அ.சா.3 முன்னிலையில் கதிர் அருவாள் ஒன்று, தேங்காய் திருகி கம்பி, மணிபர்ஸ், ரூபாய் 5000/-ம் கைப்பற்றப்பட்டுள்ளது என்பதையும் பொய்ப்பிக்கும் வகையில் எந்த பதில்களும் பெறப்படவில்லை. எனவே, எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதியின் அடிப்படையில் அ.சா.5, அ.சா.3 மற்றும் பட்டியல் சாட்சி.6 ஆன பழனியாபிள்ளை ஆகியோர் முன்பு அத்தாட்சி அ.சா.ஆ.6 மூலம் கதிர் அருவாள் ஒன்று, தேங்காய் திருகி கம்பி, மணிபர்ஸ், ரூபாய்

5000/−ம் கைப்பற்றியுள்ளார் என்பது எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

17. இந்திய சாட்சியச் சட்டம் 1872 பிரிவு 114 ஆனது நீதிமன்றம் சில பொருண்மைகளை அனுமானம் செய்யலாம் என்று கூறுகிறது. அதன்படி பிரிவு 114(a)ன் படி திருட்டு நடைபெற்ற பின் ஒரு மனிதன் திருட்டு பொருட்களை உரிய விளக்கம் அல்லது காரணம் இல்லாமல் அவர் வசம் வைத்திருந்தால், அவர் திருடியவர் அல்லது திருட்டு பொருள் என்று தெரிந்து வாங்கியவர் என்று அனுமானிக்கலாம் என்று கூறுகிறது. இந்த வழக்கில் எதிரியால் அடையாளம் காட்டப்பட்டு கதிர் அருவாள் ஒன்று, தேங்காய் திருகி கம்பி, மணிபர்ஸ், ரூபாய் 5000/−ம் கைப்பற்றப்பட்டுள்ளது. அதற்கு எதிரி தரப்பில் எந்த விளக்கமும், காரணமும் கூறப்படவில்லை. எனவே, நீதிமன்றம் எதிரி தான் திருடியவர் என்று அனுமானிக்கிறது. இந்த வழக்கில் எதிரியானவர் கதிர் அருவாள் ஒன்று, தேங்காய் திருகி கம்பி, மணிபர்ஸ், ரூபாய் 5000/−ம் ஆகியவற்றிற்கு தான் தான் உரிமையாளர் என்று தான் வைத்திருப்பதற்கு உரிய ஆவணமோ, சாட்சியமோ முன் வைக்காத காரணத்தினால் புகார்தாரரின் பணத்தை தான் எதிரி வைத்துள்ளார் என்றும், அதனால் திருடப்பட்ட புகார்தாரரின் பணம் தான் எதிரியின் வசம் இருந்தது என்றும், இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 114(a)ன் கீழ் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. மேலும், பிரிவு 331(4) BNS பின்வருமாறு கூறுகிறது. (பிரிவு 331(4) BNS).சிறைத்தண்டனைக்குரிய ஒரு குற்றம் எதையும் செய்வதன் பொருட்டு, சூரியன் மறைத்த பின்பும் உதயமாவதற்கு முன்பும், பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதலை அல்லது இரவில் கன்னமிடுதலைச் செய்கிற எவரொருவரும், ஐந்தாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை வகைகள் இரண்டில் ஒன்று விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும், மற்றும் அவரை அபராதத்திற்கு உள்ளாக்கவும் செய்யலாம்; மற்றும் செய்ய உட்கருத்துக் கொள்ளப்பட்ட குற்றம் திருட்டாக

இருக்குமானால், சிறைத்தண்டனையின் கால அளவு பதினான்கு ஆண்டுகள் வரை நீடிக்கப்படலாம்,

19. மேலும், பிரிவு 305(a) BNS பின்வருமாறு கூறுகிறது. பிரிவு 305(a).எந்தக் கட்டிடம், கூடாரம் அல்லது கலம் மக்கள் குடியிருப்பாக, அல்லது சொத்தின் பாதுகாப்பிற்காக உபயோகப்படுத்தப்படுகிறதோ அந்தக் கட்டிடம், கூடாரம் அல்லது கலம் எதிலும் திருட்டைச் செய்கிற எவரொருவரும், ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை வகைகள் இரண்டில் ஒன்று விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும், மற்றும் அவரை அபராதத்திற்கு உள்ளாக்கவும் செய்யலாம்.

20. மேலும், இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்ற ஒரு காரணத்தை வைத்து மட்டும் எதிரி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்ய முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. இந்த வழக்கில், அ.சா.4 தனது சாட்சியத்தில், அ.சா.1 னிடம் புகார் மனு பெறப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது குறித்தும், அ.சா.5 தனது சாட்சியத்தில், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது ஆகியவற்றை குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், அ.சா.3 எதிரியிடமிருந்து புகார்தாரரின் ரூபாய் 5000/−ம் பணம் கைப்பற்றப்பட்டது குறித்து தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்.

22. மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரி தான் புகார்தாரரின் வீட்டிற்குள் இரவில் பதுங்கி அத்துமீறி நுழைந்து புகார்தாரரின் பணத்தை திருடி சென்றுள்ளது தெரிய வருகிறது.

23. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில், எதிரி மீது பிரிவுகள் 331(4), 305(a) BNS ன் கீழான குற்றச்சாட்டு எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது

என்றும்; எதிரி பிரிவுகள் 331(4), 305(a)ன் கீழ் குற்றவாளி என்றும் இந்நீதிமன்றம் கண்டறிகிறது.

24. எதிரி திருட வேண்டும் என்ற குற்றத்தை செய்ய வேண்டும் என்பதற்காக புகார்தாரரின் வீட்டிற்குள் இரவில் பதுங்கி அத்துமீறி நுழைந்து பணத்தை திருடிச் சென்றுள்ளார் என்பது எல்லா தகுநிலை சந்தேத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் பிரிவுகள் 331(4) மற்றும் 305(a) BNS ன் கீழ் எதிரி குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

25. எதிரி பிரிவுகள் 331(4), 305(a) BNS ன் கீழ் குற்றவாளி என்றும் முடிவு செய்து, புகார்தாரரின் வீட்டிற்குள் இரவில் பதுங்கி அத்துமீறி நுழைந்து பணத்தை எதிரி திருடிய காரணத்தினால் எதிரிக்கு பிரிவு 3 அல்லது 4 நன்னடத்தை சட்டத்தின் கீழான பலனை இந்த எதிரிக்கு அளிக்க இயலாது என முடிவு செய்து, எதிரியிடம் பிரிவு 271(2) BNSS ன் கீழ் தண்டனை குறித்து வினவிய போது, எனக்கு வயதான அம்மா, அப்பா உள்ளார்கள். அவர்களை நான் தான் பார்க்க வேண்டும். அதனால் குறைவான தண்டனை வழங்க வேண்டுகிறேன் என்று கூறினார். வழக்கின் தன்மை, வழக்கு பொருண்மை, சூழ்நிலைகள் மற்றும் எதிரியின் பதில் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, எதிரிக்கு பிரிவு 331(4) BNS ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு ஏற்கனவே சிறையில் இருந்த 14.12.2025 முதல் 07.08.2026 வரையிலான 237 நாட்களை தண்டனையாக விதித்தும், ரூ.25 அபராதமும், கட்டத் தவறினால் ஒரு வாரம் மெய்க்காவல் சிறை தண்டனையும்; எதிரிக்கு பிரிவு 305(a) BNS ன் கீழான குற்றத்திற்கு எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த 14.12.2025 முதல் 07.08.2026 வரையிலான 237 நாட்களை தண்டனையாக விதித்தும், ரூ.25 அபராதமும், கட்டத் தவறினால் ஒரு வாரம் மெய்க்காவல் சிறை தண்டனையும்; விதித்தும் பிரிவு 271(2) BNSS ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி சிறைதண்டனையை எதிரி ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த 14.12.2025 முதல்

07.08.2026 வரையிலான நாட்களை மேற்படி சிறை தண்டனையில் இருந்து பிரிவு 468 BNSS ன் கீழ் கழித்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது.

**26. வழக்குச் சொத்து** –

இந்த வழக்கில் பி.ஆர்.எண்.62/2026 ல் தாக்கலான வழக்கு சொத்தான **வரிசை எண்.1)**அல்மதினா ஜூவல்லர்ஸ் தென்காசி என எழுதப்பட்ட நீலம் மற்றும் வெள்ளை கலர் மணிபர்ஸ் ஒன்று மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி செயல்படவும், மேல்முறையீடு இல்லை என்றால் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது. **வரிசை எண்.2)**பணம் ரூ.5,000/– இந்நீதிமன்ற கு.ப.ம.எண்.127/2026, நாள் 03.02.2026 ம் தேதியிட்ட உத்தவின்படி இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான நடராஜன் என்பவர் மேற்படி பணத்தை தனது இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி செயல்படவும், மேல்முறையீடு இல்லை என்றால் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் மேற்படி பணத்தின் உரிமையாளர் மேற்படி பணத்தினை நிரந்தரமாக வைத்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. **வரிசை எண்.3)**முனைப்பகுதி உடைந்த நிலையிலுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கதிர் அருவாள் ஒன்று மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி செயல்படவும், மேல்முறையீடு இல்லை என்றால் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது. **வரிசை எண்.4)**முனைப்பகுதி நெளிந்த நிலையில் உள்ள தேங்காய் திருக பயன்படுத்தும் இரும்பு கம்பி ஒன்று மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீடு உத்தரவுப்படி செயல்படவும், மேல்முறையீடு இல்லை என்றால் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு,

TNTS020013692026



பின்னர் 2026ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 7ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI Digitally signed by MUTHU LAKSHMI Date: 2026.08.07 19:29:22 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| அ.சா.1 | நடராஜன் |
| அ.சா.2 | அன்பழகன் |
| அ.சா.3 | சீனிவாசன் என்ற வாசு |
| அ.சா.4 | திரு.முருகன், தலைமைக் காவலர் |
| அ.சா.5 | திருமதி.தேவி, உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் மனு | 09.06.2026 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | பணம் இருக்கும் புகைப்படம் | 09.06.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.1 | அசல் |
| 3 | பார்வை மகஜர் | 18.06.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.2 | அசல் |
| 4 | கதிர்அரிவாள், தேங்காய் துருவி, பர்ஸ் உள்ள புகைப்படம் | 23.06.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.3 | அசல் |
| 5 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி | 23.06.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.3 | அசல் |
| 6 | அத்தாட்சி | 23.06.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.3 | அசல் |
| 7 | முதல் தகவல் அறிக்கை | 23.06.2026 | அ.சா.ஆ.7 | அ.சா.4 | அசல் |
| 8 | மாதிரி வரைபடம் | 14.07.2026 | அ.சா.ஆ.8 | அ.சா.5 | அசல் |
| 9 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | 14.07.2026 | அ.சா.ஆ.9 | அ.சா.5 | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | படிவம்91 | 14.07.2026 | அ.சா.ஆ.10 | அ.சா.5 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள் –** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள் –** இல்லை.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.08.07 19:29:28 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தென்காசி.**

**குறிப்பு :–**

1. எதிரி விசாரணை காலத்தில் காவலில் இருந்தார்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.